மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்

ஸ்ரீரங்கம்

OS.No.302/2019

07.03.2026

**<u>பெயர்.திரு. சேகர் த/பெ. பெரியண்ணன் (வயது /2026)</u>**

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி–</u>**

பிரதிவாதி எதிருரை மற்றும் கூடுதல் எதிருரை தாக்கல் செய்ததை நான் படித்து பார்த்துதான் நிருபண வாக்குடுமூலம் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். எதிருரை மற்றும் கூடுதல் எதிருரையில் காஞ்சியாயி அவர்கள் 27.01.2012 ம் தேதியன்று ஒரு உயில் ஆவணம் எழுதி அது ஸ்ரீரங்கம் சார்பதிவகத்தில் 14/2012 ஆக பதிவாகி அதன்அடிப்படையில் அவர் இறந்ததற்கு பின்னிட்டுதான் பிரதிவாதிக்கு உயில் நடைமுறைக்கு வந்தது தெரியும் என்றால் தெரியாது . எதிருரையில் சொல்லி ய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எதிருரையில் கூடுதல் எதிருரையில் படித்த பிறகுதான் நிருபன வாக்குமூலம் தாக்கல் செய்தேன் என்று கூறியிருப்பதால் தெரிந்தே பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல . நான் எனது நிருபண வாக்குமூலத்தில் இந்த உயில் ஆவணத்தை மறுத்து எதுவும் சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை . நான் தாக்கல் செய்துள்ள நிருபணவாக்குமூலத்தில் 11 ஆவணங்கள் உள்ளது அதில் 6 ஆவணங்கள்தான் குறியிடுசெய்யப்பட்டுள்ளது மற்ற ஆவணங்களை நிருபணவாக்குமூலத்தில் திருத்தம் செய்யவில்லை என்றால் சரிதான் . நிருபணவாக்குமூலத்தில் முதல் பக்கத்தில் கடைசி பத்தியில் வா .சா.ஆ.1 ன் அசல் உள்ளதாக குறிபிடப்பட்டுள்ளது ஆனால் அது நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னிடம் அசல் இல்லை என்றால் சரியல்ல . 12.10.1982 ஆவணத்தின் அசல் என்னிடம் இல்லை என்றா'ல் சரிதான் . அசல் ஆவணங்கள் இல்லாமல் அசல் ஆவணம் இருக்கின்றது என்று குறிப்பிட்டு பொய்யான ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல . எனக்கு காஞ்சியாயிதான் திருமணம் செய்துவைத்தார்கள் என்பதற்கு பத்திரிக்கையை தவிர வேறு ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். உயிலில் சாட்சி கையொப்பம் செய்த அய்யாவு எனக்கு தூரத்து உறவினர் என்று கூறியுள்ளேன் ஆனால் வ .சா.ஆ.5 ஆவணம் பத்திரிக்கையில் மாமான்கள் என்ற உறவுமுறையில் அய்யாவு பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அய்யாவு எனது நெருங்கிய உறவினர் எனது மாமா அவரை தூரத்து

உறவினர் என்று பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல . உயில் எழுதியபோது நான் இருந்தேனா என்றால் இல்லை . ஆவணம் எனக்கு எப்படி கிடைத்தது என்ற எனது வழக்கிலோ , நிருபணவாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. கிளியம்மாள் பெரியண்ணன் மகன்தான் நான் என்று காஞ்சியாயி அவர்களுக்கு நன்கு தெரியும். வா.சா.ஆ.1 ல் என்னை முத்தம்மாள் அவர்களின் மகன் என்று குறிப்பிட்டுள்ளார் மேற்படி உயில் காஞ்சியாயி அவர்களால் எழுதப்பட்டிருந்தால் அவ்வாறு குறிப்பிட்டிருக்க மாட்டார்என்றால் சரியல்ல. வா.சா–ஆ.1 காஞ்சியாயியால் ஏற்படுத்தப்படவில்லை அதில் காஞ்சியாயின் கையொப்பம் இல்லை மோசடியாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் காஞ்சியாயியை பராமரித்து வந்தேன் என்பதற்கு எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை . நான்தான் காஞ்சியாயின் வளர்ப்பு மகன் என்பதை காண்பிப்பதற்கு எந்தவிதமான அரசு ஆவணங்கள் தாக்கல் செய்யயவில்லை என்றால் சரிதான் . நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வருவாய் ஆவணங்களில் நான்தான் பணம் செலுத்தினேன் என்பதை காண்பிப்பதற்கு எந்தவிதமான ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இறந்த காஞ்சியாயிக்கு நான்தான் வளர்ப்பு மகன் என்பதற்கு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. காஞ்சியாயி இறந்ததற்கு பின்னிட்டு அவருக்கு வாரிசு என்று அறிவிக்ககோரி பிரதிவாதி மாண்புமிகு இரண்டாவது உரிமையியல் நீதிமன்றம் திருச்சியில் அசல் வழக்கு .1613/2013 என்ற வழக்கில் கடந்த 12.04.2014 அன்று வாரிசு சான்றிதழ் உத்தரவு பெற்றுள்ளார் என்றால் தெரியாது. அவர் வாரிசுதாரர் என்பதற்கு மனு தாக்கல் செய்து உத்தரவு வாங்கிய விவரம் எனக்கு தெரிந்தே தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல . அந்த அசல் வழக்கிலேயே பிரதிவாதிக்கும் அவரது கணவருக்கும் காஞ்சியாயி ஒரு பதிவு பெற்ற உயில் ஆவணம் எழுதிவைத்துள்ளார் அந்த ஆவணத்தை காட்டிதான் உத்தரவு பெற்றுள்ளார் என்றால் தெரியாது . விவரங்கள் தெரியும் தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல . காஞ்சியாயி அவர்களுக்கு கிரையம் கொடுத்த சொஷைட்டியில் கடனின்மை சான்று பிரதிவாதிக்குதான் வழங்கப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியாது.

விவரம் தெரிந்தே தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் போலியான உயில் தயார் செய்து என் மீது நடவடிக்கை எடுக்ககோரி மாநகரா காவல் ஆணையரிடம் புகார் அளித்து விசாரணை நிலுவையில் இருந்தபோது காவல் நிலையத்தை பிரதிவாதியை தரப்பினராக சேர்த்து தாக்கல் செய்த வழக்கு அசல் வழக்கு 59/2019 இந்நீதிமன்றத்தில்

நிலுவையில் இருந்து வருந்ததது என்றால் சரிதான் . மேற்படி வழக்கின் பிரதிவாதி எதிருரை தாக்கல் செய்தது பின்னிட்டு இரண்டு வழக்கையும் ஒன்றாக நடத்த வேண்டும் என்று மனு தாக்கல் செய்த பின்புதான் அந்த வழக்கை விசாரணை செய்யாமல் விட்டுவிட்டேன் என்றால் சரியல்ல . அந்த வழக்கை இந்த வழக்குடன் சேர்த்து நடத்தினால் போலியான உயில் என்று தெரிந்துவிடும் என்பதால் அந்த வழக்கை சேர்த்து நடத்தவில்லை என்றால் சரியல்ல. காஞ்சியாயி இறந்து சுமார் 14 வருடங்கள் இருக்குமா என்றால் சரிதான். வழக்கு சொத்து பொறுத்து என்மீது வருவாய் ஆவணங்கள் என் பெயரில் ஏற்படுத்தப்படவில்லை என்றால் சரிதான் . வழக்கு சொத்து பொறுத்து வருவாய் ஆவணங்கள் பிரதிவாதி பெயரில் நாளது தேதிவரை இருக்கின்றது என்றால் தெரியாது. காஞ்சியாயி அவர்கள் ஒரு பதிவு பெற்ற உயில் ஆவணம் எழுதி அவர்கள் இறப்பிற்கு பின்னிட்டு உயில் நடைமுறைக்கு வந்து வருவாய் ஆவணங்கள் மற்றும் சொத்தின் சுவாதீனம் பிரதிவாதி வசம்தான் உள்ளது என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கு பிரதிவாதிதான் உரிமையாளர் நான் எந்த காலத்திலும் உரிமையாளர் இல்லை என்றாலும் நான் ஏற்படுத்திய ஆவணம் பொய்யான ஆவணம் என்றால் சரியல்ல . என்னிடம் காட்டப்படும் உயில் ஆவணம் 21.07.2012 ல் எழுதப்பட்டதாக சொல்லும் ஆவணம் எனக்கு தெரியாது. 21.07.2012 ல் காஞ்சியாயி அவர்கள் ஒரு பத எண் .14/2012 என்ற பதிவு பெற்ற உயில் எழுதிய விவரம் எனக்கு தெரியாது. மேற்படி உயில் எழுதிய விவரம் என்கு நன்றாக தெரியும் தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல . வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**Sd/–xxxxx**

Taken down by me in open court , read over
to his and accepted by him as correct and
made is his signature

Sd/-K.Vijai Rajesh.,
District Munsif – Cum - Judicial Magistrate,
Srirangam